## ‘குறள்’ எனும் அறிவுத் திருவிளக்கை திக்கெட்டும் பரப்பும் ஆசானாக வலம் வந்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் !

## கன்னியாகுமரியில் – அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்ட 25ஆம் ஆண்டு நிறைவுப் பெருவிழா!

# உலகமெங்கும் உள்ள என் அருமைத் தமிழர்கள் எங்கிருந்தாலும் வருக ! வருக !

## தமிழ்கூறு நல்லுலகினருக்கு – முதல்வர் மு.க. ஸ்டாலின் அன்பு வேண்டுகோள் !

**சென்னை, நவ.14–**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா காண்பதையொட்டி வரும் டிசம்பர் 31–ஆம் தேதி மற்றும் ஜனவரி 1–ஆம் தேதி ஆகிய இரண்டு நாட்களும் தமிழ்நாடு அரசு, 25 ஆண்டு நிறைவுப் பெருவிழாவைக் கொண்டாட இருக்கிறது.**

**இந்நிகழ்வையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் காணொலி வாயிலாக ஆற்றிய உரையில், “குறள் எனும் அறிவுத் திருவிளக்கை திக்கெட்டும் பரப்பும் ஆசானாக வலம் வந்தவர், முத்தமிழறிஞர் கலைஞர்!” என்றும், “கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்ட 25 ஆண்டு நினைவுப் பெருவிழாவிற்கு உலகெங்கும் உள்ள என் அருமைத் தமிழர்கள் எங்கிருந்தாலும் வருக! வருக!” என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் ஆற்றிய உரை வருமாறு:**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது தமிழ் வணக்கம்!

வடக்கே உள்ள வானுயர்ந்த இமய மலைக்கு நிகராக – தெற்கே குமரிமுனையில் தமிழ்மலையாக வள்ளுவர் சிலையை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவருக்கு 2000–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 133 அடியில் வானுயர் புகழுக்குச் சாட்சியமாக சிலை அமைத்தார்.

அந்தச் சிலை அமைக்கப்பட்டு கால் நூற்றாண்டு ஆகிறது. வெள்ளிவிழா காண்கிறது வள்ளுவனார் சிலை!

இந்த உலகத்திற்கே பொதுமறை வழங்கியவர் நம் அய்யன் திருவள்ளுவர். சாதி, மத பேதங்களைக் கடந்து தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த திருவள்ளுவர் தந்த “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்பதை வாழ்வியலாக பாமர மக்களின் உள்ளங்களிலும் பதிய வைத்து, உதடுகளை உச்சரிக்க வைத்தது திராவிட இயக்கம்! ஆனால், அந்த வள்ளுவருக்கே காவிச் சாயம் பூச இன்றைக்கு ஒரு கும்பல் நினைக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் “சமத்துவத்தை வலியுறுத்தியவர் வள்ளுவர்! அவர் எல்லோருக்கும் பொதுவான தமிழர்களின் அடையாளம்”– என்று மீண்டும் முழங்க வேண்டியிருக்கிறது!

### திருக்குறளுக்குப் பெருமை சேர்த்த திராவிட இயக்கம்!

திருக்குறளுக்குப் பெருமை சேர்த்து, வெகு மக்களின் வாழ்வியலோடு கலக்க தன்னால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்தது திராவிட இயக்கம்.

திருக்குறள் மாநாடுகளை நடத்தி வள்ளுவத்தை உயர்த்திப் பிடித்தவர் தந்தை பெரியார். “நம் நெறி, குறள் நெறி! நம் மதம், குறள் மதம்!”– என்று சொன்னார் தந்தை பெரியார்.

“குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் – உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் – உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா.



அத்தகைய குறள் எனும் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்புகின்ற பணியை தன்னுடைய ஒப்பற்ற கடமையாகக் கருதிச் செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், குறள் பரப்புகின்ற ஒரு ஆசானாக வலம் வந்தார், தலைவர் கலைஞர்.



> **குறள் எனும் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்புகின்ற பணியை தன்னுடைய ஒப்பற்ற கடமையாகக் கருதிச் செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், குறள் பரப்புகின்ற ஒரு ஆசானாக வலம் வந்தார், தலைவர் கலைஞர்.**
>
> **குறளோவியம் தீட்டினார். குறளுக்கு விளக்கவுரை தந்தார். தலைநகரில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் குறளை எழுதவைத்து, குறளை எளிய மக்களுக்குக் கொண்டு சேர்த்தார்.**

குறளோவியம் தீட்டினார். குறளுக்கு விளக்கவுரை தந்தார். தலைநகரில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார். அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் குறளை எழுதவைத்து, குறளை எளிய மக்களுக்குக் கொண்டு சேர்த்தார்.

குமரியில் சிலை அமைக்க 1975–ஆம் ஆண்டே திட்டமிட்டாலும், அவருடைய கனவு 2000–ஆம் ஆண்டுதான் நிறைவேறியது. சிலையை உருவாக்குகின்ற பொறுப்பை சிற்பி கணபதி ஸ்தபதியார் அவர்களிடம் ஒப்படைத்தார்.

133 அதிகாரங்களைக் குறிக்கின்ற வகையில் 133 அடியில் சிலை அமைத்தார். ஏறத்தாழ நான்கு ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞரின் கருத்துக்கு சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதி காட்சி வடிவம் தந்து அந்தச் சிலையை உருவாக்கினார்.

சிலை வடிவமைக்கின்ற பணி நடைபெறும்போது, “சிலை நிற்குமோ நிற்காதோ”– என்று சந்தேகமாகக் கேட்டவர்களிடம் எல்லாம், ஸ்தபதி அவர்கள், “அலையும் மலையும் இருக்கும் வரை சிலை அசையாது இருக்கும், கவலைப்படாதீர்கள்”– என்று சொன்னார்.

### ஆழிப்பேரலையில் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற திருவள்ளுவர்!

அதை உறுதிப்படுத்துகின்ற விதமாக தமிழ்நாட்டையே உலுக்கிய ஆழிப்பேரலையின் போது கூட எந்தவித பாதிப்பும் இல்லாமல், கம்பீரமாக நிமிர்ந்து நின்றார் திருவள்ளுவர்.

“மக்கள் தொண்டும் வள்ளுவர் சிலையும் என் பிறவிப் பெரும்பயன்” என – செவ்வனே முடிவுற்ற திருவள்ளுவர் சிலைப் பணி 2000–ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று கலைஞர் அவர்களால் நாட்டிற்கு – தமிழினத்திற்கு வழங்கப்பட்டது.

“பொத்தானை அழுத்தும்போது என் உடம்பு நடுங்கியது”– என்று உணர்ச்சி வசப்பட்டார் தலைவர் கலைஞர். இந்த விழாவில் தான் திருவள்ளுவரை ‘அய்யன் திருவள்ளுவர்,’– என்று அழைக்கும்படி தலைவர் கலைஞர் வேண்டுகோள் விடுத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் எதைச் செய்தாலும் கலை நுணுக்கத்தோடு பார் போற்றும் வகையில் செய்வார் என்பதற்கு விண்ணைத் தொடும் வண்ணம் உயர்ந்து நிற்கின்ற திருவள்ளுவர் சிலையும் ஒரு சான்று.

## வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மாற வேண்டும் !
## சமுதாயம் – குறள் சமுதாயமாக மலர வேண்டும் !

இப்படி பெருமைமிகு சிலை வெள்ளி விழா காண்கிறது. வரும் டிசம்பர் 31–ஆம் தேதி மற்றும் ஜனவரி 1–ஆம் தேதி இரண்டு நாட்களும் தமிழ்நாடு அரசு, 25 ஆண்டு நிறைவுப் பெருவிழாவைக் கொண்டாட இருக்கிறது.

### திருக்குறள் – ஓவியப் போட்டிகள்!

இந்த வெள்ளிவிழாவை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள் – கல்லூரி மாணவர்களிடையே சோஷியல் மீடியாவில் ஷார்ட்ஸ் – ரீல்ஸ் – ஏ.ஐ மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப்போட்டிகள் நடத்தப்படும்.

அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டிருக்கின்ற இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும்.

அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்படும்.

வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் இணையக் கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள், புது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் ‘யூடியூப்’ மூலம் ஒளிபரப்பப்படும்.

வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு தமிழ் இணையக் கழக மையங்கள் மூலமாக திருக்குறளின் பெருமைகள் குறித்த போட்டி நடத்தப்படும்.

அனைத்து மாவட்ட நூலகங்களிலும், அன்றைய நாள் திருவள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு, திருக்குறளின் பெருமையை உணர்த்துகின்ற நிகழ்ச்சிகள், திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தல் செய்யப்படும்.

திருக்குறள் விளக்க உரைகள் மற்றும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

### தென்குமரியிலிருந்து இந்திய வரலாறு!

வரும் டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய நாட்களில் இந்தியாவின் வரலாற்றை தென்குமரியிலிருந்து எழுத வேண்டும் என்ற நம்முடைய இலக்கின் அடையாளமான கன்னியாகுமரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் நானும் பங்கேற்கிறேன். உலகெங்கும் உள்ள என் அருமைத்தமிழர்கள் எங்கிருந்தாலும் வருக! வருக! என்று அன்புடன் அழைக்கிறேன்.

உலகப் பொதுமறையை உருவாக்கிய வள்ளுவர், தமிழர் என்பது சிறப்பு!

உலகமே அவரைக் கொண்டாடிக் கொண்டிருப்பது தனிச்சிறப்பு!

அவருக்கு 133 அடியில் சிலை அமைத்தது பெரும் சிறப்பு!

அத்தகைய சிலை இப்போது வெள்ளி விழா கொண்டாடுவது வெகுசிறப்பு!

வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும்.

சமுதாயம் – குறள் சமுதாயமாக மலர வேண்டும்.

வேற்றுமையின் வேர்களை கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆக வேண்டும்.

வாழிய குறளும், வள்ளுவர் புகழும்... வாழிய வாழியவே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து பண்ருட்டி மற்றும் மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை காணொலி காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (12.11.2024) திறந்துவைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றியக்குழு தலைவர் சபா.பாலமுருகன், பண்ருட்டி ஒன்றியக்குழு துணைத்தலைவர் எ.தேவகி உட்பட பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (12.11.2024) ரூ.13 கோடி மதிப்பில் 2வது எம்.ஆர்.ஐ.ஸ்கேன் கருவியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் மண்டல குழு தலைவர் திருமதி. மீனா லோகு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, மருத்துவ கண்காணிப்பாளர் கண்ணதாசன், மற்றும் பலர் உள்ளனர்.